# *புனித ஜெவ்ரி (642 – 716)*

இவர் இங்கிலாந்தில் பிறந்தார். பின் புனித ஆசீர்வாதப்பரின் சபையில் சேர்ந்து ரிப்பன் நகரில் குருப்பட்டம் பெற்றார். இவர் தூயவர், தாழ்ச்சி நிறைந்தவர். எனவே ஒரு புதிய மடத்தை நிறுவிக் கொண்டிருந்த புனித ஆசீர்வாதப்பருக்கு துணைபுரிய இவரை அனுப்பினார்கள். இவர் மடத்தின் உபதலைவராகவும் 681-ஆம் ஆண்டில் இன்னொரு மடத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

புனித ஆசீர்வாதப்பர் மரணப்படுக்கையில் இருக்கும் போது தமக்குப் பதிலாக சபையை நடத்தும்படி இவரை நியமித்தார். இவர் 26 ஆண்டுகளாக இந்த வேலையைச் செய்தார். இவரது ஆட்சியில் நன்மைகள் ஏராளமாக விளைந்தன. புனித பேதா என்பவர் இவருடைய சன்னியாசிகளில் ஒருவர்.

அறுபத்தாறு வயதில் பதவியை விட்டு விலகி ரோமைக்கு திருயாத்திரையாகச் சென்றார். பாப்பானவருக்கு ஓர் அரிய நூலை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

**சிந்தனை:**

தூய்மையும் மனத்தாழ்ச்சியும் கடவுளுக்கு பிரியமானவை. இவ்விரு புண்ணியங்களையும் கொண்டிருக்கிறவர்களை கடவுள் இவ்வுலகில் மேலாய் உயர்த்துகிறார்.

**செபம்:**

ஆண்டவரே, தூய்மையும் மனத்தாழ்ச்சியையும் நாங்கள் நேசிக்கச் செய்யும்.